பார்த்துச் செய்துகொள்ளலாம் என்று குறிப்பிட்டார்கள். காலப்போக்கு என்று விட்டுவிடாமல், ஒவ்வொரு கிராமத்திற்கும் விரிவுபடுத்த உடனடியாக ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : மதுரை ஜில்லா பூரா எடுக்க வேண்டுமென்றால், ஜாஸ்தி தொகை இருந்தால்தான் முடியும். அதனால்தான் முடியவில்லை. நிதிநிலைக்குத் தக்கவாறு செய்துகொண்டிருக்கிறோம்.

திரு. **கே. எஸ். அர்த்தநாரீஸ்வர கவுண்டர் :** சார், நகரங்களைச் சுற்றி என்று ஏற்பாடு செய்வதனால் விவசாயிகள் நகரத்தை நோக்கி வந்துவிடுகிறார்கள். நகரங்களைச் சுற்றி உள்ள கிராமங்களில் விவசாயத்தில் அக்கறை இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, கிராமங்களில் காய்கறிகள் உற்பத்தி செய்யவும் சர்க்கார் வழிவகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : நகரத்தைச் சுற்றிச் செய்வதால், அங்கேதான் நல்ல விற்பனை இருக்கும், நல்ல விலையும் கிடைக்கும். அந்த நோக்கத்தோடுதான் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கிராமங்களில் வேண்டும் என்றால், ப்ளாக் டெவலப்மெண்ட் மூலமாக எவ்வளவு தூரம் செய்யலாமோ அவ்வளவுக்குச் செய்யப்படுகிறது.

Artificial inseminations

* 231 *Q*.—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of artificial insemination centres in the State;

(*b*) the number of artificial inseminations carried out so far during the year 1963–64 ; and

(*c*) the number of cases among them proved successful ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) 97 (including the 61 Key Village Centres).

(*b*) 367,134.

(*c*) Out of 292,845 cases verified 175,993 were successful.

திரு. எம். வி. கரிவேங்கடம் : தலைவர் அவர்களே, கருத்தரிப்பு நிலையங்களிலே பாதி அளவுக்குத்தான் வெற்றிகரமாக இருக்கிறது. முழுவதும் வெற்றிகரமாக இருக்கும் வகையில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : பாதிதான் என்பதில்லை. 60 சத விகிதம் வெற்றிகரம் என்ற தகவல் இருக்கிறது. போகப் போகத்தான் எவ்வளவு அதிகமாக வெற்றிகரமாகச் செய்ய முடியும் என்பதை அரசாங்கம் ஆராய்ச்சி செய்யும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, கருத்தரிப்பு முறை நல்ல ஏற்பாடுதான். நன்றாகத்தான் வேலை செய்கிறது. ஆனால் ஒரு சந்தேகம். ப்ளாக்குக்கு ப்ளாக் வித்தியாசமாக இருக்கிறது. ஒரு ப்ளாக் கம்பல்சரி என்றும், மற்ற பிளாக்கில் அப்படியில்லாமலும் இருக்கிறதே. எல்லா இடங்களிலும் கம்பல்சரியாகச் செய்ய சர்க்கார் முன் வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : எந்த வட்டாரத்தில் கால் நடைகள் ஜாஸ்தியாக இருக்கிறதோ அங்கே அபிவிருத்திக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. போகப் போக ப்ளாக்குகள் பூராவும் அது வரும்.

13th March 1965]

திரு. க. ர. நல்லசிவம் : செயற்கை முறைக் கருத்தரிப்புமூலம் 60 சத விகித வெற்றி கண்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மீதமுள்ள 40 சத விகிதம் வெற்றி பெறுததற்குக் காரணம் என்ன ? அதை ஆராய்ந்து, முழு வெற்றியைக் காண அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறதா ? 9-00 a.m.

கனம் திரு. பூ. கக்கன் : 1963–64-ம் ஆண்டில் 60 சத விகித வெற்றி அளித்திருக்கிறது. குழந்தைகள் பிறப்பதிலேகூட நூற்றுக்கு நூறும் பிழைக்கும் என்று சொல்ல முடியாது. நூற்றுக்கு நூறு நன்றாக வரும் என்றுதான் எண்ணிச் செய்கிறார்கள். சில இடங்களில் வெற்றி கிட்டாமல் போய்விடுகிறது.

தமிழ்நாடு போலீசார் அணியும் குல்லாவை மாற்றல்

* 232 கேள்வி.—**திரு. இராம. அரங்கண்ணல், திரு. எஸ். மாதவன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :

தமிழகப் போலீசார் அணியும் குல்லாவை மாற்ற அரசுக்கு உத்தேசமுண்டா ?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

திரு. இராம. அரங்கண்ணல் : அப்படி ஏதாவது யோசனையை போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அரசினருக்கு எழுதியிருக்கிறாரா ?

கனம் திரு. பூ. கக்கன் : குல்லாவைப் பற்றி அல்ல. ட்ரெஸ்ஸைப் பற்றிப் பரிசீலனை செய்தால் நல்லது என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, போலீஸ்காரர்கள் வைத்துக்கொள்ளக்கூடிய குல்லாய் எப்படியிருந்தால் நல்லது என்பதைக் கண்டறிவதற்கு கண்காட்சியில் இரண்டு குல்லாய்கள் வைக்கப்பட்டன. அதுபற்றிப் பொது மக்களுடைய கருத்துக்கள் அறியப் பட்டனவா ? அதனுடைய முடிவு என்ன என்று அறியலாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பொருட்காட்சியிலே கருத்துக்கள் கோரப்பட்டன. அதிலே தெரிந்தது என்னவென்றால், இப்பொழுது இருப்பதே நல்லது என்று ஏற்பட்டிருக்கிறது.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, போலீசாருடைய குல்லாயை மாற்றுவதற்கு யோசனை இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த யோசனையைப் போலீஸ் இலாகா அரசாங்கத்திற்குத் தெரிவித்ததா ? அல்லது, அரசாங்கத்தினுடைய அனுமதி இல்லாமல் காங்கிரஸ் கட்சியே அப்படிப்பட்ட நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்ததா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது காங்கிரஸ் விஷயம் ஒன்றும் இல்லை.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் : தலைவர் அவர்களே, போலீசார்கள் அணிகின்ற தொப்பியின் நிறம் ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்ததுபோல் முழுச் சிவப்பு நிறமாக இருந்தால் மக்கள் காண்கின்ற போது கொஞ்சம் அச்சுறுகின்ற நிலையில் இருக்க நல்ல வாய்ப்பு உடையதாக இருக்கும் என்று சென்ற இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே நான் கூறியிருந்தேன். அந்த மாதிரி ஏதாவது முழுச் சிவப்பாக மாற்றக்கூடிய நிலைக்கு அரசாங்கம் யோசனை செய்யுமா ? அப்படியானால் எப்பொழுது கொண்டுவரத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மாற்றுவதாக ஒன்றும் உத்தேசம் இல்லை.